# 2024ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டம் பற்றிய அறிக்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) நிகழ்நிலை காப்புச் சட்டத்தை இயற்றுவதில் பின்பற்றப்படும் செயல்முறை தொடர்பில் அக்கறை கொண்டுள்ளதுடன், சட்டமியற்றல் மற்றும் இலங்கையில் அரசியலமைப்பு ஜனநாயகத்தின் மீதான அதன் தாக்கம் தொடர்பில் பாரதூரமான கேள்விகளை எழுப்பியுள்ளது. CPA முன்னரும் இந்த பிரச்சனைகளை எழுப்பியுள்ளது, ஆனால் தொடரும் நடவடிக்கைகள் தொடர்பில் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறது. OSA தொடர்பில், வரைவு செயல்முறை இரகசியமாக மறைக்கப்பட்டுள்ளது. அவசர அவசரமாக அது நிறைவேற்றப்பட்டமை, இலங்கையில் அடிப்படை உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்ட ஒரு சட்டத்தை இயற்றுவதில் அரசாங்கத்தின் நோக்கங்கள் குறித்து கேள்விகளை எழுப்புகிறது. சட்டமூலத்தின் சாராம்சம் மற்றும் பின்பற்றப்பட்ட செயல்முறை குறித்து CPA முன்னர் கருத்து தெரிவித்ததுடன், மேற்படி சட்டமூலத்தின் அரசியலமைப்பு தன்மையையும் சவாலுக்கு உட்படுத்தியது. OSA இயற்றப்பட்டதைச் சுற்றியுள்ள சமீபத்திய நிகழ்வுகளின் வெளிச்சத்தில், பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து வேறுபாடு கொள்ளும் உரிமை என்பன மேலும் சுருக்கமடைகிறது. இத்தகைய கடுமையான சட்டம் இயற்றப்பட்டதை CPA கண்டிக்கிறது.

2024 ஜனவரி 24ஆம் திகதி இடம்பெற்ற குழுநிலை திருத்தங்களைச் சுற்றியுள்ள பிரச்சனைகள் குறித்து CPA தனது கவலையை குறிப்பிடுகிறது. பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு 31 திருத்தங்கள் தேவை என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில், அரசியலமைப்பின் 78(3) வது பிரிவுக்கு இணங்குவது குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டன, இது “பாராளுமன்றத்தில் ஒரு சட்டமூலத்திற்கு முன்மொழியப்பட்ட எந்தவொரு திருத்தமும் அத்தகைய சட்டமூலத்தின் தகுதி மற்றும் கொள்கைகளிலிருந்து விலகிச் செல்லலாகாது” என்று கூறுகிறது.

முன்மொழியப்பட்ட குழுநிலை திருத்தங்களின் கணிசமான மாற்றங்கள் காரணமாக சட்டமூலத்தை திரும்பப் பெற்று மீண்டும் வர்த்தமானியில் வெளியிட வேண்டும் என்று CPA ஆரம்பத்தில் குறிப்பிட்டது. இருந்தபோதிலும், சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை நிறைவேற்ற உச்ச நீதிமன்றம் கோரிய கட்டாய மாற்றங்களை ஏற்றுக்கொள்ளத் தவறிய அதேவேளை, அரசாங்கம் சட்டமூல செயற்பாடுகளைத் தொடர்ந்தது.

உதாரணமாக, புலனாய்வுகளில் ஈடுபடும் அனைத்து நபர்களும் புலனாய்வுகளுக்கு உட்படுத்தப்படும் விடயங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் இரகசியத்தன்மையைப் பேணுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கோரியது, ஆனால் தற்போதைய சட்டத்தில் அத்தகைய பாதுகாப்பு இல்லை (தீர்மானத்தின் பக்கம் 60 ஐ பார்க்கவும்). “தீங்கிழைக்கும்” மற்றும் “வேண்டுமென்றே” போன்ற சொற்பதங்களை சேர்ப்பது தெளிவற்றது என்றும் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது (தீர்மானத்தின் பக்கம் 48 ஐ பார்க்கவும்), இருப்பினும், OSA பிரிவு 14 இல்

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org

அத்தகைய சொற்பதங்களைத் தொடர்ந்து பயன்படுத்துகிறது. மேலும், பயனரால் உருவாக்கப்பட்ட ஒரே உள்ளடக்கமாக இருக்கும் மின்னஞ்சல்கள் மற்றும் SMS/MMS சேவைகள் போன்ற சில குறிப்பிட்ட சேவைகளுக்கு OSA இலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது (தீர்மானத்தின் பக்கங்கள் 59 முதல் 60 வரை பார்க்கவும்). இருப்பினும், இந்த மாற்றங்கள் செய்யப்படவில்லை. மற்றும் உச்ச நீதிமன்றம் கரிசனைகளை எழுப்பிய விதிகள் OSA இன் பிரிவு 27 இன் கீழ் தொடர்கின்றன, இதனால் உச்ச நீதிமன்றத்தின் முடிவு தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் புறக்கணிக்கப்பட்டது என்ற கவலையை எழுப்புகிறது.

OSA சட்டத்தை இயற்றுவதற்கு அரசாங்கம் அவசரம் காட்டியதும், உச்ச நீதிமன்ற தீர்மானத்தை அது புறக்கணித்ததும் அரசியலமைப்பு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் OSA இன் சட்டபூர்வத்தன்மை குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை வேண்டுமென்றே குறைமதிப்பிற்கு உட்படுத்துவதன் மூலம், அரசாங்கம் இலங்கையில் சட்டத்தின் ஆட்சி மற்றும் அதிகாரப் பிரிவு என்பவற்றில் தாக்கங்களைக் கொண்ட ஒரு ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிகழ்நிலை காப்பு ஆணைக்குழுவின் பரந்த அதிகாரங்கள், தெளிவற்ற சொற்பதங்கள் மற்றும் நிபுணர்களின் பங்கு போன்ற OSA தொடர்பில் முன்னர் எழுப்பப்பட்ட பல பிரச்சனைகளின் பின்னணியிலும் இந்த கரிசனைகள் உள்ளன.

இந்த மற்றும் பிற கரிசனைகளின் வெளிச்சத்தில், OSA இன் செயல்முறை மற்றும் சாராம்சத்தை மறுபரிசீலனை செய்து, OSAஐ ரத்து செய்ய உடனடி நடவடிக்கைகளை எடுக்கவும், நிகழ்நிலை பாதுகாப்பு குறித்த கரிசனைகளை உண்மையாக நிவர்த்தி செய்யும் ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தவும் CPA அரசாங்கத்தை வலியுறுத்துகிறது. மேலும், பங்குதாரர்களின் ஆலோசனைகள் மற்றும் மதிப்பாய்வுக்கு நேரத்தை வழங்கும் வெளிப்படையான மற்றும் உள்வாங்கல் சட்டத்தை உருவாக்கும் செயல்முறையைக் கொண்டிருக்குமாறு CPA அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறது. 2022 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டம் மற்றும் 2016 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பன இயற்றப்பட்ட போது பின்பற்றப்பட்ட செயல்முறைகள், சட்டத்தை உருவாக்கும் செயல்முறை, அதன் வெளிப்படைத்தன்மை மற்றும் மாறுபட்ட கண்ணோட்டங்களில் காரணியாக இருப்பதை உறுதி செய்ய போதுமான நேரம் எடுக்கப்பட்டமை போன்றவை சில எடுத்துக்காட்டுகளாக உள்ளன. இலங்கை மீட்சி மற்றும் மறுசீரமைப்பு செயல்முறைக்குள் செல்லும் போது இத்தகைய நல்லாட்சி நடைமுறைகள் அடிப்படையானவையாகும்.